සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

තෙවන වාර පරීක්ෂණය 2020 | 11 ශ්‍රේණිය
மூன்றாம் தவணைப் பரீட்சை 2020 | தரம் 11
**Third Term Test 2020** | **Grade 11**

**ඉතිහාසය II**
**வரலாறு II**
History **II**

පැය තුනයි
*3* **மணித்தியாலம்**
***Three hour***

- பகுதி I இன் 1 ஆம் வினா கட்டாயமானது
- பகுதி II இன் நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக

## பகுதி I

1. (அ) பகுதி (i) இன் கீழ்த்தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இன் கீழ்த்தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i. ஜின்கங்கை, யான்ஓயா, கலாவாவி, விக்டோரியா நீர்த்தேக்கம், மட்டக்களப்பு, காலி, கற்பிட்டி, அநுராதபுரம், ரைகம, நீர்கொழும்பு, இரத்தினபுரி, இப்பன்கட்டுவ (12 புள்ளிகள்)

ii. செங்கடல், இலண்டன், சுயஸ்கால்வாய், பர்மா, சென்னை, பிலிப்பைன்ஸ் தீவுகள் (6 புள்ளிகள்)

(ஆ) கீழே A, B, C, D ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக

A. பனாகடுவ செப்பு சாசனத்தில் அநுராதபுரம் எப்பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது

B. இந்தியாவின் குலசேகர பாண்டிய மன்னனுடன் கலந்துரையாடி புனித தந்ததாதுவை மீண்டும் இந்நாட்டுக்கு கொண்டுவந்த ஆட்சியாளன்

C. அநுராதபுரத்திலுள்ள புனித இடங்களைப் பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்தவர்


D. “நானே அரசு” எனக்கூறிய பிரான்சிய ஆட்சியாளன் (4 புள்ளிகள்)

A, B பகுதிகளில் தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்க



1. “A” எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கட்டிடம் யாது?
2. இது அமையப்பெற்றுள்ள வரலாற்று சிறப்புமிக்க நகரம் யாது?
3. இது ஆக்கப்பட்டுள்ள ஊடகம் யாது?
4. இதனை அமைத்த தென்னிந்திய ஆட்சியாளர்கள் யாவர்?

(4 புள்ளிகள்)



1. உரு “B” இனால் காட்டப்படுபவர் யார்?
2. இவர் எக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினார்?
3. இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பிற்கமைய நிறைவேற்றுத்துறையின் தலைவராக விளங்கியவர் யார்?
4. அவ்வரசியல் யாப்பிற்கமைய இலங்கை எப்பெயரால் அழைக்கப்பட்டது?

(4 புள்ளிகள்)

## பகுதி II

2. i. இராசரட்டைக்கால வரலாற்றை அறிவதற்கு பௌத்த சமய நூல்கள் மூன்றினை குறிப்பிடுக (3 புள்ளிகள்)

ii. இலங்கையின் ஈரவலயத்திற்குரிய வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வசிப்பிடமாக அமைந்த குகைகள் நான்கினைப் பெயரிடுக. (4 புள்ளிகள்)

iii. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கைக் கோல பண்புகளை இரண்டு காரணிகளூடாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. முன்வரலாற்று காலத்தில் ஏற்பட்ட தொழினுட்ப விருத்தியினை மூன்று காரணிகளூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

3. i. துட்டகைமுனு மன்னனின் படைத்தளபதிகளாக இருந்த பருமகமார் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. அதிகாரத்தை மத்தியமயமாக்கும் செயற்பாட்டில் பண்டுகாபய மன்னனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. நாட்டை ஐக்கியப்படுத்தும் செயற்பாட்டின்போது முதலாம் விஜயபாகு மன்னனால் பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. முற்காலத்தில் இந்நாட்டை ஆட்சி செய்த அரசர்கள் அயல்நாடுகளுடன் நட்பு ரீதியான வெளிநாட்டு தொடர்புகளை பேணி வந்தமையை மூன்று காரணிகளூடாக உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

4. i. முற்காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த மேற்கு கரையோரத்தில் அமைந்திருந்த வர்த்தக துறைமுகங்கள் மூன்றை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள குளத்தின் கூறுகளின் பணிகளை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. குளக்கட்டு　　B. கலிங்கல் தொட்டி

C. அலைதாங்கி　　D. கலிங்கல் (4 புள்ளிகள்)

iii. புராதன இலங்கையில் சமூக நலன் கருதி சட்டங்கள் செயற்படுத்தப்பட்ட விதத்தினை பிரதான இரு காரணிகளூடாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. முற்காலத்தில் இந்நாட்டு சமூகத்துள் பெண்களுக்கென உயரிய இடம் வழங்கப்பட்டிருந்தமையை மூன்று விடயங்களூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

5) i. உயரிய நகராக்க பண்புகளை கொண்டிருந்த இந்நாட்டின் புராதன நகரங்கள் மூன்றினைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. இலங்கையின் புராதன நகரங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏதுவான காரணிகள் இரண்டினை குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. இரண்டாம் நகராக்க காலப்பகுதியின் நகராக்க செயற்பாட்டில் காணக்கூடிய விசேட பண்புகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இரண்டாம் நகராக்க காலப்பகுதியின் பொருளாதார கோலத்தில் ஏற்பட்ட புதிய மாற்றங்கள் இரண்டினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

6) i. சீதாவாக்கை இராஜசிங்கன் மலைநாட்டை ஆக்கிரமித்தபோது போர்த்துக்கேயரிடம் சென்று பாதுகாப்பு கோரி தஞ்சமடைந்த மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. 2ம் இராஜசிங்க மன்னன் தனது ஆட்சி காலத்தில் முகம் கொடுக்க நேரிட்ட சவால்கள் இரண்டினை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. 1ம் விமலதர்மசூரிய மன்னன் முகம் கொடுத்த சவால்கள் இரண்டினை குறிப்பிட்டு அவற்றை வெற்றி கொண்ட விதத்தினையும் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கண்டி இராசதானியின் நிர்வாகம் ஒழுங்கமைந்திருந்த விதத்தினை பிரதான நிர்வாக அலகுகள் மூன்றினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

7) i. 1848ம் ஆண்டு இரண்டாம் சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட அச்சகங்க**ளூ**டாக அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட பௌத்த சஞ்சிகைகள் நான்கினைப் பெயரிடுக (4 புள்ளிகள்)

iii. 1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு சீர்த்திருத்த ஆலோசனைகள் இரண்டினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. பிரித்தானியர் ஆட்சியின் காரணமாக இலங்கை சமூகத்திற்கு கிடைத்த நன்மையான விளைவுகள் இரண்டினையும் தீமையான விளைவொன்றினையும் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்

## பகுதி III

8) i. பிரித்தானிய பிரதமர் ஜோன் கிரன்வில் அமெரிக்க குடியேற்றங்கள் மீது பிறப்பித்த வரி தொடர்பான சட்டங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. அமெரிக்க சுதந்திர போர் தொடர்பில் செல்வாக்கு செலுத்திய பிரதான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

iii. பிரான்சிய புரட்சியில் செல்வாக்கு செலுத்திய அரசியல் மற்றும் பொருளாதார காரணிகள் ஒவ்வொன்றினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. ரஷ்ய புரட்சியின் விளைவுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)


9) i. மறுமலர்ச்சி காலத்தில் புவி தொடர்பான புதிய கருத்துக்களை முன்வைத்த விஞ்ஞானிகள் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. மறுமலர்ச்சி காலப்பகுதியில் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. நாடுகாண் பயணங்களின் விருத்தி காரணமாக ஏற்பட்ட புதிய மாற்றங்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

1. (අ) (i)
1. (அ) (i)
1. (a) (i)




[අනෙක් පිටුව බලන්න / மறுபக்கம் பார்க்க / *See next page*

1. (අ) (ii)
1. (அ) (ii)
1. (a) (ii)

